# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:107** **தேதி:-13.06.2016**

## ஊதிய மாற்றமும் இதர மத்திய சங்க செய்திகளும்

அன்பார்ந்த தோழர்களே,

**3ஆவது ஊதிய மாற்றக் குழு அமைப்பு:-** பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள அதிகாரிகளின் ஊதிய விகிதங்களை மாற்றுவதற்கான 3ஆவது ஊதிய மாற்றக் குழுவினை அரசாங்கம் 10.06.2016 அன்று அமைத்துள்ளது. ஓய்வு பெற்ற நீதியரசர் சதிஷ் சந்திரா அவர்கள் இந்தக் குழுவின் தலைவராக செயல்படுவார். இந்தக் குழு தனது அறிக்கையினை ஆறு மாதங்களுக்குள் வழங்கும் என்றும் 01.01.2017 முதல் ஊதிய மாற்றம் அமுல் படுத்தப்படும் என்றும் தெரிவிக்கபட்டுள்ளது.

இது அதிகாரிகளுக்கான ஊதிய மாற்றக் குழு. இது நேரடியாக ஊழியர்களுக்கு பொருந்தாது. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களால், நிர்வாகங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரே ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் நடைபெறும். எனினும், 3ஆவது ஊதிய மாற்றக் குழுவால் நிர்ணயம் செய்யப்படும் FITMENT, RATE Of INCREMENT உள்ளிட்டவை ஊழியர்களின் ஊதிய மாற்றத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். ஊழியர்களுக்கான ஊதிய மாற்றத்திற்கான பேச்சு வார்த்தையினை துவங்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் ஏற்கனவே நிர்வாகத்தை கேட்டுக் கொண்டுள்ளது. நமது நிர்வாக அமைச்சகமான DOTயின் வழிகாட்டுதல் கிடைத்த பின்னர் தான் பேச்சு வார்த்தை துவங்க முடியும் என நிர்வாகம் பதிலளித்துள்ளது. தற்போது 3ஆவது ஊதிய மாற்றக் குழுவினை அரசாங்கம் நியமித்துள்ள அடிப்படையில் BSNL ஊழியர்களின் ஊதிய மாற்ற பேச்சு வார்த்தையினை துவங்க தேவையான வழிகாட்டுதலை கொடுக்க வேண்டும் என DOTயை வற்புறுத்தி BSNL ஊழியர் சங்கம் 13.06.2016 அன்று கடிதம் கொடுத்துள்ளது.

**BSNLஐ சீரழிக்க மற்றுமொரு முயற்சி:-** MTNLன் மொபைல் சேவைகளின் விரிவாக்கம் மற்றும் செயல்பாடுகளை வருவாயில் பங்கீடு என்ற முறையில் BSNL செய்ய வேண்டும் என வற்புறுத்தும் வகையில் தொலை தொடர்பு துறை ஒரு முன்மொழிவினை வைத்துள்ளது. MTNL தனது நெருக்கடியிலிருந்து வெளிவர உதவி செய்வது அரசாங்கத்தின் கடமை. அதற்கு மாறாக MTNLன் சேவைகளை BSNLஐ மேற்கொள்ள சொல்வது என்பது BSNLஐ மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கும் விஷயமாகும். இதனை கடுமையாக எதிர்த்து FORUM அமைச்சருக்கு கடிதம் எழுதி உள்ளது. BSNLஐ சீரழிக்கும் மற்றுமொரு முயற்சிக்கு எதிராக ஊழியர்களும், அதிகாரிகளும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

**CALL DROP பிரச்சனைக்கு தீர்வு காண 60,000 டவர்கள்:-** CALL DROP பிரச்சனை தொடர்பாக தொலை தொடர்பு நிறுவனங்களுடன் தொலை தொடர்பு செயலாளர் திரு J.S.தீபக் 10.06.2016 அன்று விவாதித்தார். ஏர்டெல், BSNL, IDEA, RELIANCE JIO மற்றும் VODOFONE நிறுவனங்களின் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர். CALL DROP பிரச்சனைக்கு தீர்வு காண 12,000 கோடி ரூபாய்கள் செலவில் 60,000 டவர்களை அமைப்பதாக தொலை தொடர்பு

நிறுவனங்கள் உறுதி அளித்தன. 6 மாதம் கழித்து நிலைமை பரிசீலிக்கப்படும் என தொலை தொடர்பு செயலாளர் பத்திரிக்கையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

**அனைத்து கேரள அமைச்சர்களும் BSNLன் இணைப்புகளை பெற்றுள்ளனர்:-** கேரள மாநிலத்தில் புதிதாக இடது ஜனநாயக முன்னணி ஆட்சிக்கு வந்துள்ளது. அந்த ஆட்சியில் பதவி ஏற்றுள்ள அனைத்து அமைச்சர்களும் அவர்களின் அதிகார பூர்வ இணைப்புகளாக BSNLன் POST PAID இணைப்புகளை பெற்றுள்ளதாக கேரள மாநில GM(S&M CM) தெரிவித்துள்ளார். இது ஒரு நல்ல செய்தி. BSNLஐ பலப்படுத்தும் வகையிலான இடது ஜனநாயக முன்னணியின் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையினை BSNL ஊழியர் சங்கம் முழு மனதுடன் பாராட்டுகிறது.

**22.05.2016 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகள்:-** 02.06.2016 அன்று நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு DIRECTOR(HR) மற்றும் GM(Rect) ஆகியோரை சந்தித்த போது ஓரிரு தினங்களில் JTO LICE தேர்வு முடிவுகள் வெளி வரும் என்று கூறியிருந்தனர். ஆனால் வெளி வராத காரணத்தால் 07.06.2016 அன்று மீண்டும் அவர் GM(Rect) அவர்களிடம் விவாதித்தார். இந்த தேர்வில் பல நீதிமன்ற வழக்குகள் உள்ளதால் அது தொடர்பாக பரிசீலிக்க ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இது தொடர்பாக பத்து நாட்களுக்குள் முடிவுகளை வெளியிட வேண்டும் என நமது பொது செயலாளர் வலியுறுத்தினார். இது தொடர்பாக 09.06.2016 அன்று நமது பொது செயலாளர் நிர்வாகத்திற்கு ஒரு கடிதத்தையும் எழுதியுள்ளார். மேலும் அன்றைய தினம் நமது துணைப் பொதுசெயலாளர் GM(Rect) அவர்களை சந்தித்து உடனடியாக தேர்வு முடிவுகளை வெளியிட வேண்டும் என வலியுறுத்தினார். கார்ப்பரேட் அலுவலகம் நியமித்துள்ள கமிட்டியின் ஒரு உறுப்பினர் விடுப்பில் உள்ளதாகவும் அவர் 13.06.2016 அன்று பணியில் சேர உள்ளதாகவும் தெரிய வருகிறது. விரைவில் முடிவுகளை வெளியிட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்படும் என GM(Rect) உறுதி அளித்துள்ளார்.

**கவுன்சில்கள்:-** 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் வெற்றிகரமாக முடிவுற்றுள்ள இந்த சூழ்நிலையில் தேசிய, மாநில மற்றும் தலமட்ட கவுன்சில்கள் அமைக்கப்பட வேண்டும். இது தொடர்பாக நமது சங்கத்தின் அகில இந்திய மையக்கூட்டம் விரைவில் கூடி விவாதித்து வழிகாட்டுதல்கள் வழங்கப்படும். அதன் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என மாவட்ட மாநில சங்கங்களை மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**முகம்மது அலி மறைந்தார்:-** பிரபல குத்துச்சண்டை வீரர் முகம்மது அலி 03.06.2016 அன்று காலமானார். உலகின் தலை சிறந்த விளையாட்டு வீரர்களில் அவரும் ஒருவர். அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்னாமை தாக்கிய போது அதற்கு எதிராக குரல் கொடுத்த மிகச்சிறந்த மனித நேயம் மிக்கவர் முகம்மது அலி. அவரது மறைவிற்கு BSNL ஊழியர் சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது.

**10% JAO LICE தேர்வு:-** 10 சதவிகித கோட்டாவிற்கான JAO LICE தேர்வு 28.08.2016 அன்று நடைபெறும் என கார்ப்பரேட் அலுவலகம் அறிவிப்பு கொடுத்துள்ளது. மொத்தம் 365 காலிப்பணியிடங்களுக்கு இந்த தேர்வு நடைபெற உள்ளது.

**கனரா வங்கி தனது வட்டி விகிதங்களை உயர்த்தியுள்ளது:-** BSNL நிர்வாகத்திற்கும் கனரா வங்கிக்கும் ஊழியர்களுக்கு கடன் தருவது தொடர்பாக 23.03.2016 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. தற்போது ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல் அடிப்படையில் கடன்களுக்கான வட்டிகளை உயர்த்தி உள்ளதாக கனரா வங்கி தெரிவித்துள்ளது.

**VRS திட்டம் தொடர்பாக BSNL CMD கருத்தில் மாற்றம்:-** VRS திட்டம் தொடர்பாக BSNL CMD சமீபத்தில் INDIAN EXPRESS பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் சொல்லப்பட்ட கருத்துக்கள் ஊழியர்களிடையே ஒரு வருத்தத்தை ஏற்படுத்தி இருந்தது. அந்த பேட்டியில் BSNL நிறுவனம் லாபமடைய வேண்டுமெனில் VRS திட்டம் அவசியம் என்று தெரிவித்திருந்தார். FORUMத்தின் CORE COMMITTEE தலைவர்கள் 30.05.2016 அன்று BSNL CMD ஐ சந்தித்து VRS திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என உறுதியாக தெரிவித்தனர். மேலும் VRS திட்டம் தொடர்பாக அவரது கருத்துக்களுக்கு மறுப்பினை கடிதமாக கொடுத்தனர். இதற்கு பின்னர் 02.06.2016 அன்று பூனாவில் BSNL CMD பத்திரிக்கையாளர்களை சந்தித்தார். அந்த பத்திரிக்கையாளர் சந்திப்பின் போது BSNLல் VRS திட்டம் அமுலாக்கப்பட மாட்டாது என தெரிவித்தார். VRS தொடர்பாக BSNL CMDயின் இந்த கருத்தினை நாம் வரவேற்கிறோம்.

**கேபிள்கள் பாதிப்புக்கு உள்ளாக்கப்படும் போது முறையான நடவடிக்கை தேவை:-** BSNLன் காப்பர் மற்றும் OFC கேபிள்கள் பாதிப்பிற்கு உள்ளாக்கப்படுவதால் BSNLன் சேவைகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. எனினும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், பின் நடவடிக்கைகளும் தலமட்டங்களில் எடுக்கப்படுவதில்லை. FIR போட வேண்டிய பல இடங்களில் அது போடப்படுவதில்லை. இது தொடர்பாக 34ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்தில் கடுமையாக விவாதிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அனைத்து தலைமை பொது மேலாளர்களுக்கும் கார்ப்பரேட் அலுவலகம் ஒரு கடிதம் எழுதி உள்ளது. இது ஒப்புக்கு எழுதப்பட்ட கடிதம் போல உள்ளது. எனவெ ஒரு கடுமையான நடவடிக்கையினை தலமட்ட நிர்வாகம் எடுக்க மாவட்ட மாநில சங்கங்கள் தேவையான அழுத்தத்தை கொடுக்க வேண்டும் என மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**உபகரணங்கள் பற்றாக்குறை தொடர்பாக DIRECTOR(CFA)விற்கு கடிதம்:-** பல மாநிலங்களில் தேவையான உபகரணங்கள் பற்றாக்குறையாக உள்ளது என தகவல்கள் வந்துள்ளது. 31.05.2016 அன்று நடைபெற்ற FORUMத்தின் CORE COMMITTEE கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதன் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என DIRECTOR (CFA)விற்கு FORUM சார்பாக 02.06.2016 அன்று கடிதம் எழுதப்பட்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**